**வலிமட பிரதேச சபை**
**பதுளை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 24 ஆம் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 யூலை 16 ஆம் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2020 யூலை 23 ஆந் திகதியும் தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து வலிமட பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இன் நிதிநிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு நிலுவை முத்திரைக் கட்டணம் ரூபா 30,854,990 ஆக இருந்தபோதிலும் நிதிக்கூற்றுக்களில் ரூபா 30,883,321 ஆக கணக்கில் காட்டப்பட்டுள்ளது | சரியான முறையில் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் சரியாக்கப்படும். |
| (ii) | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 179,900 பெறுமதியான இலத்திரனியல் ஜெனரேற்றர் சொத்துக் கணக்கில் மூலதனமாக்கப்பட்டிருக்வில்லை. | சரியான முறையில் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் சரியாக்கப்படும். |

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை | இணங்காமைகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 1980 திசெம்பர் 31 ஆந் திகதிய 1980/46 ஆம் இலக்க சுற்றுநிருபம். | சபைக்கு சொந்தமான சொத்துக்கள் 5 வருடத்திற்கு ஒரு தடவை விலை மதிப்பீடு செய்யப்படவேண்டிய போதிலும் 154 கடைகளிற்கான வாடகை மதிப்பீடு செய்யாது அறவிடப்பட்டுள்ளன. | விலை மதிப்பீடு செய்து வாடகை அறவிடப்பட வேண்டும். | விலை மதிப்பீட்டு திணைக்களத்திற்கு கடிதம் அனுப்பியுள்ள போதும் விலை மதிப்பீடு செய்யப்படவில்லை. |
| (ஆ) | மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 1988 மே 17 ஆந் திகதிய 1988/22 ஆம் இலக்க சுற்றுநிருபம். | ஆதனவரி அறவிடப்பட்ட சொத்துக்கள் 5 ஆண்டுகளுக்கு ஒரு தடவை விலை மதிப்பீடு செய்ய வேண்டிய போதிலும் 2010 ஆம் ஆண்டில் விலை மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு மீளாய்வாண்டில் ஆதனவரி அறவிடப்பட்டிருந்தது. | விலை மதிப்பீடு காலத்திற்கு காலம் நடைமுறைப்படுத்தி வாடகையை அறவிட வேண்டும். | சொத்துக்கள் சம்மந்தமாக விலை மதிப்பீட்டு திணைக்களத்திற்கு எழுத்து மூலம் வேண்டுகோள் விடுத்த போதும் விலை மதிப்பீடு மேற்கொள்ளப்படவில்லை. |
| (இ) | மாடு கொள்ளும் சட்டம் மற்றும் 1980 ஜனவரி 20 ஆந் திகதி 541/17 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் வர்த்தமானி அறிவித்தல் | மாடு கொள்ளுவது சம்மந்தமாக (இடம்) விண்ணப்பம் கிடைத்தபின் மாடு கொல்லும் சட்டம் இன் 7(2) பந்தியின் பிரகாரம் 3 மாடு கொள்ளும் இடம் பற்றிய விபரங்கள் வர்த்தமானி அறிவித்தலில் அறிவிக்கப்படவில்லை. | சட்டத்தின் அதிகாரத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க குறிப்பு பண்ணியுள்ளேன். |
| (ஈ) | 1988 இலக்கம் 56 மற்றும் 2000 இலக்கம் 53 ஆகிய சட்டத்தின் திருத்தப்பட்ட 1980 இலக்கம் 47 ஆகிய தேசிய சுற்றாடல் சட்டம் பந்தி 23(அ) | சபையினால் அனுமதி கொடுத்த 3 மாடு கொள்ளும் இடத்திற்கு 2018 மற்றும் 2019 ஆண்டுக்கான சுற்றாடல் அனுமதி எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சட்டத்தின் அதிகாரப் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | சுற்றாடல் அனுமதி எடுப்பதற்கு தேவையான நடவடிக்கையை குறிப்பு எடுத்துள்ளோம். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 48,516,115 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 24,722,945 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | வருமான மூலம் | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவைகள் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 3,461,186 | 3,461,186 | 3,322,570 | 138,616 | 3,384,634 | 3,384,634 | 2,224,551 | 1,160,083 |
| (ii) | வாடகைகள் | 18,436,323 | 18,436,323 | 16,148,314 | 2,288,009 | 18,780,074 | 18,780,074 | 17,392,668 | 1,387,405 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 3,038,000 | 3,174,366 | 3,174,366 | - | 2,417,400 | 2,852,875 | 2,852,875 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 42,737,851 | 42,737,851 | 59,072,158 | - | 33,951,070 | 33,951,070 | 11,875,438 | 22,075,632 |
| | மொத்தம் | 67,673,360 | 67,809,726 | 81,717,408 | 2,426,625 | 58,533,178 | 58,968,653 | 34,345,532 | 24,623,120 |

#### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| 5 வருடத்திற்கு மேலாக காணப்பட்ட கிடைக்க வேண்டிய நிலுவை ஆதனவரி ரூபா 3,383,466 மற்றும் நிலுவை ஏனைய வருமானம் ரூபா 68,445,625 அறிவிடப்பட்டிருக்கவில்லை. | கிடைக்க வேண்டிய வருமானம் அறவீடு செய்யப்பட வேண்டும். | அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கின்றேன். |

### 2.2.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு கிடைக்க வேண்டிய ரூபா 13,515,721 பெறுமதியான நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் கிடைக்க வேண்டிய ரூபா 30,883,321 பெறுமதியான முத்திரைக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் நிலுவை முத்திரைக் கட்டணங்கள் அறவிடப்பட வேண்டும். | பட்டியல் தயாரித்து உரிய தினத்திற்கு அனுப்பப்பட்ட போதிலும் உரிய கட்டணத்தில் ஒரு பகுதியே கிடைத்திருந்தது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் பொதுச்சுகாதாரம், பொதுப்பயன்பாட்டுச்சேவைகள், பொது வழிகள், மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு

#### (அ) செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரித்தளிக்கப்பட்டிருக்கவில்லை. | செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும் | அடுத்த வருடத்தில் தயாரிப்பதற்கு விடய அலுவலருக்கு எழுத்து மூலமாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

#### (ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| சபை ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030 தொடர்பாக அறிவை பெற்றிருப்பினும் சபையுடன் தொடர்புபடுத்தி இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி இலக்கு மற்றும் நோக்கு என்பவற்றை அளவிட்டுக்கொள்ளும் குறிகாட்டிகளை இனங்கண்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்கு மற்றும் நோக்கத்தை அளவீடு செய்யும் குறிக்காட்டிகளை இனங்கண்டு அதற்கிணங்க வருடாந்த இலக்குகளை அடைவது தொடர்பான விருத்தி மட்டத்தை அளவிட வேண்டும் | எதிர்வரும் காலத்தில் சரியாக செய்ய நடவடிக்கை எடுக்கின்றேன். |

## 3.2 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | அரச வங்கிக் கிளைகள் இயங்கும் சபைக்கு சொந்தமான காணிகள் தொடர்பாக புதிய விலை மதிப்பீட்டு அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு வரி அறவிடப்பட்டிருக்காமையால் மீளாய்வாண்டில் ஏப்ரலில் இருந்து திசெம்பர் வரையான காலப்பகுதிக்கு ரூபா 1,443,753 பெறுமதியானவை சபைக்கு நட்டம் ஏற்பட்டிருந்தது. | புதிய விலை மதிப்பீட்டு அறிக்கைப்படி ஆதனவரி அறவிடப்பட வேண்டும். | உரிய நிறுவனம் காசு கட்டுவதற்கு சம்மந்தம் செய்துள்ளனர். மற்றும் புதிய ஒப்பந்தம் செய்யப்பட்டு உள்ளூராட்சி ஆணையாளர் திணைக்களத்திற்கு அனுப்பியுள்ளேன். |
| (ஆ) | 5 வருடத்திற்கு அதிகமாக காணப்பட்ட செலுத்த வேண்டிய செலவினக் கடன்கொடுநர் ரூபா 24,554,596 மீளாய்வாண்டிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய நிலுவை தீர்ப்பனவு செய்ய வேண்டும். | செலவின கடன்கொடுநர் ஒரு பகுதி தீர்ப்பனவு செய்யப்பட்டுள்ளது மற்றும் மீகுதி ஏற்பாடு வந்தபின் தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு 3 பதவிகள் தொடர்பாக 6 ஆளணியினர் அதிகமாகவும் 6 பதவிகள் தொடர்பாக 14 வெற்றிடம் உள்ளன. | கூடுதலானதற்கும் பற்றாக்குறையானதது சம்மந்தமாக உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அனுமதி வழங்கப்பட்ட மனிதவளம் முகாமை பற்றாக்குறையானதாக கூடுதலாக உள்ள அலுவலர்களுக்காக அனுமதி பெற வேண்டுகோள் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. மற்றும் சகல ஆட்சேர்ப்பையும் நிறுத்தச்சொல்லி தேர்தல் ஆணையாளரினால் கடிதம் வழங்கப்பட்டதால் பற்றாக்குறையை நிரப்ப முடியவில்லை. |

**3.4 பெறுகைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான சபையினால் பெறுகைத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த பெறுகைத்திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | மீளாய்வாண்டிற்கான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்படவில்லை. |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 கணக்காய்வு முகாமைத்துவ குழு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டம் 2 மட்டுமே நடாத்தப்பட்டிருந்தது. | குறைந்தது ஒவ்வொரு காலாண்டிற்கும் ஒன்றுப்படி கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டம் நடாத்தப்பட வேண்டும். | சுற்று நிருபத்தில் உள்ள அறிவுறுத்தல்ப்படி கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டம் நடாத்த நடவடிக்கை எடுக்கின்றேன். |